**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.</u>**
**அசல் வழக்கு எண். 124/2019**
**Connected with in**
**OS.103/2019**

DW1 – ஜீவபாலன் த/பெ. வீராசாமி
நாள் –09.02.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

தாவா சொத்துக்களுக்கு நாங்கள் கோயிலாருக்கு செலுத்திய குத்தகை ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ. 1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது** (எண்ணிக்கை –5) தாவா சொத்துக்களுக்கு நாங்கள் அரசுக்கு செலுத்திய கிஸ்து ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது** (எண்ணிக்கை–3) தாவா சொத்திற்கு நாங்கள் பயிர் காப்பீடு செய்ததற்கான இணையவழி ரசீது தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 3–ம் பிரதிவாதி லெட்சுமியின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் நகல் தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கு 103/2019–ஐ தாவாப்படி தீர்ப்பளித்தும் அசல் வழக்கு 124/2019–ஐ செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.